18th March 1958]

SRI R. SWAMINATHA MERKONDAR : தஞ்சை ஜில்லாவில் உள்ள பணத்தைத் தஞ்சை ஜில்லாவிலேயே செலவு செய்ய அபிப்பிராயமா அல்லது இதர ஜில்லாக்களுக்குச் செலவு செய்ய அபிப்பிராயமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி இதில் எழவில்லை. இருந்தாலும் சொல்கிறேன், இதர ஜில்லாக்களுக்கு உபயோகப்படுத்தப்படமாட்டாது.

SRI A. VEDARATHNAM : என்ஜினீயரிங் காலேஜ் ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் மற்ற இரண்டு கல்லூரிகளும் ஏற்படுத்தப்போகிறது என்று எடுத்துக்கொள்ளலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி என்ஜினீரிங் காலேஜைப் பொறுத்தது. மருத்துவ காலேஜ் பற்றியும், அக்கிரிகல்ச்சரல் காலேஜ் பற்றியும் மற்ற மந்திரிகளிடம் கேள்வி போடவேண்டுமே தவிர அதற்குப் பதில் சொல்ல என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை.

Medical Colleges.

* 355 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா போர்டின் தீர்மானப்படி அந்த ஜில்லாவில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த உத்தேசமா ?

(ஆ) அப்படியானால் எங்கு, எப்போது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The matter is under consideration.

SRI A. VEDARATHNAM : இந்த விஷயம் அரசாங்கத்தின் ஆலோசனைக்கு வந்து ரொம்ப காலமாகிறது. இதுபற்றி எப்பொழுது ஒரு முடிவிற்கு வருவார்கள். இது அனுகூலமான முறையில் முடிவு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நீண்ட காலமாக இது சர்க்காரின் யோசனையில் இருக்கிறது என்று சொல்வது சரியல்ல. குறுகிய காலமாகத்தான் அது யோசனையில் இருக்கிறது. வைத்திய கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்றால் சர்வகலாசாலையின் அங்கீகாரம் வேண்டும். பணம் அதிகமாக வேண்டும். அதற்கு வேண்டிய உபாத்தியாயர்கள் எல்லாம் வேண்டும். ஆக, இத்தனை சிக்கல்கள் இருப்பதால் இதையெல்லாம் யோசனை செய்து எப்படியாவது அங்கு ஆரம்பிக்கலாமா என்பது யோசனையில் இருக்கிறது.

SRI N. S. RAMALINGAM : டாக்டர் அழகப்பச் செட்டியார் டிரஸ்ட்டில் இருந்து தஞ்சையில் ஒரு மருத்துவக் கல்லூரி வைப்பதாக இருந்ததே அது முடிவாகி விட்டதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதெல்லாம் இப்பொழுது ஒன்றுமில்லை. அதெல்லாம் போய்விட்டது.

SRI A. A. RASHEED : Sir, does it mean that the University has not given the permission to open a Medical College ?

THE HON. SRI M. A. MANICKAVELU : I think we have either applied or are applying for it.

SRI M. C. MUTHUKUMARASWAMY : குறுகிய காலம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த வருஷத்தில் இருந்து குறுகிய காலம் என்று சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எல்லாம் இரண்டு, மூன்று மாத காலமாக.

LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

Sri A. GOVINDASAMY : யூனிவர்ஸிட்டியிடம் கேட்கப்பட்டதா என்று ரிக்கார்டைப் பார்த்துச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ரிக்கார்டில் ஒன்றுமில்லே. அவரை நேரடியாகப் பார்த்து அவரிடம் முதலில் சொன்னோம். சடங்குகள் எல்லாம் நடக்கிறது.

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : தேவஸ்தானம் நிதியிலிருந்து பணம் கொடுக்கத் தயாராயிருக்கும் பழனி போன்ற யிடங்களில் காலேஜ் திறக்க அரசாங்கம் முன்வருமா ?

Mr. SPEAKER : தனிக் கேள்வி போடவேண்டும்.

Sri M. D. THIAGARAJA PILLAI : தஞ்சை ஜில்லா போர்ட், ரெயில்வே செஸ் நிதியில் இருந்து ஒன்றே முக்கால் கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டு வருகிற வருஷம் இந்த மெடிகல் காலேஜை அங்கு ஆரம்பிக்க ஏற்பாடு செய்திருப்பதாக அறிகிறேன். அதற்குமுன் கட்டிடங்கள் போன்ற வசதிகள் எல்லாம் ஏற்பாடு செய்ய அரசாங்கம் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : வைத்திய கல்லூரிக்காக ஜில்லா போர்ட் 30 லட்சம் அந்த நிதியில் இருந்து கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். கட்டடம் எல்லாம் கட்டி அந்தக் கல்லூரியை ஆரம்பிப்பது என்றால் அதற்கு பல வருஷங்களாகும். ஆகவே இப்பொழுது இருக்கும் கட்டிடத்தை எடுத்து உபயோகப்படுத்திக்கொண்டு பின்னர் பார்க்கலாம்.

Sri A. VEDARATHNAM : இந்தக் கல்லூரியை அங்கு ஏற்படுத்துவதற்கு பணம் வேண்டும், யூனிவர்ஸிட்டியின் அனுமதி வேண்டுமென்று சொன்னார்கள். இந்த ரெயில்வே செஸ் நிதியிலிருந்து பணம் கிடைக்கிறது. பூமியைப் பொறுத்த வரையில், அங்கு பெரிய ராஜா, மிராசுதார் ஆஸ்பத்திரிகள் போன்ற இடம், அதாவது இடவசதி இருக்கிறது. ஆகவே நம் அரசாங்கம், யூனிவர்ஸிட்டிக்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : முதலில் இவ்வளவு பணம் ஜில்லா போர்டிற்கு வரும் என்று தகவல் இருந்தது. ஆனால் எப்பொழுது வரும் என்று சந்தேகமாயிருந்தது. அது மத்திய சர்க்காரிலிருந்து வந்து தஞ்சை கஜனாவில் இப்பொழுது பணம் இருக்கிறது. ஆனால் அதை எடுப்பதற்கு சில விதிகள் இடம் கொடுக்கவில்லே. ஆகவே, அவ்விதிகளை எப்படி மாற்றுவது என்பது பரிசீலனையில் இருக்கிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM : அங்கத்தினர்கள், இவ் விஷயத்தில் ஆத்திரப்படவோ அவசரப்படவோ அவசியமில்லே. எவ்வளவு ஜரூராக நடவடிக்கைகள் எடுத்துவரவேண்டுமோ அவ்வளவு ஜரூராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, வீண் கேள்விகளுக்கு அவசியமில்லே என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri N. R. THIAGARAJAN : தஞ்சையில் முன்பு குறுகிய கால கல்வி, அதாவது எல்.எம்.பி. கோர்ஸ் என்று மூன்று வருடப் படிப்பு கற்றுக் கொடுக்க ஒரு மெடிக்கல் ஸ்கூல் இருந்தது. அதை மீண்டும் ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறதா ? அப்படிச் செய்தால் கிராமங்களுக்கு அதிக டாக்டர்கள் கொடுக்க முடியுமே ?

The Hon. Sri M. A. MANICKAVELU : காலேஜ் ஆரம்பிக்கலாமா என்று யோசனை இருக்கும்போது ஒரு ஸ்கூல் ஆரம்பிக்கவேண்டுமென்று அங்கத்தினர் சொல்வது, கீழே போவதாக இருக்கிறது.

Mr. SPEAKER : Next question, No. 356.

Sri T. S. RAMASWAMY PILLAI : Sir, my question has been mutilated I do not want to put my question.

Mr. SPEAKER : The hon. Member is not putting his question. Then I shall pass on to the next question No. 357.